# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

| | | | |
|---|---|---|---|
| வா.சா. | 1 | நாள் | : 09.9.2025 |
| அசல் வழக்கு எண். | 55/2024 | | |
| பெயர் | செந்தில்நாதன் | த/பெ | சோமசுந்தரம் |
| வயது | | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணையின் தொடர்ச்சி :**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான்.

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 02.05.2024 தேதியிட்ட 1ம் ஐட்ட தாவா சொத்தின் கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 13.07.2012 தேதியிட்ட 1ம் ஐட்ட தாவா சொத்தின் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதி பெயரில் உள்ள அடமானம் ரத்து ஆவணம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.3 | 04.05.2024 தேதியிட்ட 1ம் ஐட்ட தாவா சொத்தின் வில்லங்க சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 16.08.2003 தேதியிட்ட ராஜாராமன் என்பவர் சோமசுந்தரத்திற்கு எழுதிக்கொடுத்த 2ம் ஐட்ட தாவா சொத்தின் கிரய பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.5 | 02.05.2024 தேதியிட்ட 2ம் ஐட்ட தாவா சொத்தின் கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 04.05.2024 தேதியிட்ட 2ம் ஐட்ட தாவா சொத்தின் வில்லங்கச்சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 02.05.2024 தேதியிட்ட 3, 4 ஐட்ட தாவா சொத்தின் கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 02.05.2024 தேதியிட்ட 5ம் ஐட்ட சொத்தின் கணிணி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | 10.06.2009 தேதியிட்ட கணபதி என்பவர் சோமசுந்தரத்திற்கு எழுதிக்கொடுத்த 6ம் ஐட்ட தாவா சொத்தின் கிரய பத்திரம் பதிவு நகல் |

S.Sathm

| | |
|---|---|
| வா.சா.ஆ.10 | 17.09.2012 தேதியிட்ட சோமசுந்தரம் என்பவர் கவிதாவிற்கு எழுதிக்கொடுத்த 6ம் ஐட்ட தாவா சொத்தின் செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.11 | 14.05.2018 தேதியிட்ட கவிதா என்பவர் State Bank of Indiaவிற்கு எழுதிக்கொடுத்த 6ம் ஐட்ட தாவா சொத்தின் அடமான பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.12 | 02.05.2024 தேதியிட்ட 6ம் ஐட்ட தாவா சொத்தின் கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.13 | 05.05.2024 தேதியிட்ட 6ம் ஐட்ட தாவா சொத்தின் வில்லங்கச்சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.14 | 20.03.2024 7ம் ஐட்ட தாவா சொத்தின் கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.15 | 20.03.2024 தேதியிட்ட 8, 9, 11, 12, 13, 14 ஐட்ட தாவா சொத்தின் கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.16 | 19.08.1999 தேதியிட்ட பார்த்தசாரதி என்பவர் சோமசுந்தரத்திற்கு எழுதிக்கொடுத்த 8 ஐட்ட தாவா சொத்தின் கிரய பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.17 | 25.03.1990 தேதியிட்ட கலியபெருமாள் என்பவர் சோமசுந்தரத்திற்கு எழுதி கொடுத்த 9ம் ஐட்ட தாவா சொத்தின் கிரய பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.18 | 01.01.1992 தேதியிட்ட கலியபெருமாள் என்பவர் சோமசுந்தரத்திற்கு எழுதிக்கொடுத்த 11ம் ஐட்ட தாவா சொத்தின் கிரய பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.19 | 03.09.2004 தேதியிட்ட கஸ்தூரி ரெங்கா என்பவர் சோமசுந்தரத்திற்கு எழுதிக்கொடுத்த 12, 13 மற்றும் 14ம் ஐட்ட தாவா சொத்தின் கிரய பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.20 | 26.03.2024 தேதியிட்ட சோமசுந்தரம் என்பவர் கவிதாவிற்கு எழுதிக்கொடுத்த 7 முதல் 14 வரை உள்ள ஐட்ட தாவா சொத்தின் செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.21 | 2.05.2024 தேதியிட்ட 3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள 7 முதல் 14ம் ஐட்ட தாவா சொத்தின் கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்டநகல் |
| வா.சா.ஆ.22 | 01.05.2024 தேதியிட்ட 7 முதல் 14ம் ஐட்ட தாவா சொத்தின் வில்லங்க சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.23 | 22.05.2006 தேதியிட்ட ரெங்காபாஷியம் என்பவர் வசந்திக்கு எழுதிக்கொடுத்த 15 மற்றும் 16ம் ஐட்ட தாவா சொத்தின் கிரய பத்திரம் பதிவேற்ற நகல் |
| வா.சா.ஆ.24 | 28.02.2007 தேதியிட்ட ராஜாராமன் என்பவர் வசந்திக்கு எழுதிக்கொடுத்த 17 மற்றும் 18ம் ஐட்ட தாவா சொத்தின் கிரய பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.25 | 01.03.2007 தேதியிட்ட பாஸ்கரன் என்பவர் வசந்திக்கு எழுதிக்கொடுத்த 19ம் ஐட்ட தாவா சொத்தின் கிரய பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.26 | 26.03.2024 தேதியிட்ட வசந்தி என்பவர் கவிதாவிற்கு எழுதிக்கொடுத்த 15 முதல் 19 வரை உள்ள ஐட்ட தாவா சொத்தின் செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு நகல் |

S. Sau

| | |
|---|---|
| வா.சா.ஆ.27 | 01.01.2024 தேதியிட்ட 15, 16 ஐட்ட தாவா சொத்தின் வில்லங்க சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.28 | 01.01.2024 தேதியிட்ட 17, 18 மற்றும் 19ம் ஐட்ட தாவா சொத்தின் வில்லங்க சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.29 | 09.02.2009 தேதியிட்ட கணபதி, தக்ஷணாமூர்த்தி, சோமசுந்தரம் மற்றும் சீனிவாசன், ஆகியோர் ராஜதுரை கன்டியர்க்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.30 | 01.01.2024 தேதியிட்ட வரிசை எண். 29 ஐட்ட சொத்தின் வில்லங்க சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.31 | Guild line value பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |

**1, 3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தற்போது 50 வயதாகிறது. நான் எட்டாவது படித்திருக்கிறேன். 2003ல் திருமணம் நடந்தது. எனக்கு திருமணமாகி மூன்று ஆண்டுகள் கழித்து பழைய வீட்டில் நானும் என் மனைவியும் தனியாக வசித்து வருகிறோம். 1, 2 பிரதிவாதிகள் என் தாய், தந்தையர். அவர்கள் 2ம் ஐட்ட சொத்தில் வசித்து வருகிறார். 3ம்பிரதிவாதி என் சகோதரி. அவருக்கு என் அப்பாதான் திருமணம் செய்துவைத்தார். தாவா கிராமத்தில் 3ம் பிரதிவாதி அவர் கணவர் குழந்தைகளுடன் தனியாக வசித்து வருகிறார். 2003ல் என் அப்பா செம்பனார்கோவிலில் செந்தில் எலக்ட்ரானிக்ஸ் என்ற பெயரில் கடை வைத்து கொடுத்தார். அது மூன்று லட்சம் ரூபாய் செலவில் வைக்கப்பட்டது என்றால் சரியல்ல இரண்டு லட்சம் தான். அந்த கடையில் நஷ்டம் ஏற்பட்டதால் அதை தொடர்ந்து நடத்தமுடியவில்லை. செந்தில் ஸ்டுடியோ என் வீட்டில் ஒரு பகுதியில் நடத்தி வந்தேன். செந்தில் ஸ்டுடியோ என்ற பெயரில் என் அப்பா சீர்காழியில் எனக்கு கடை வைத்துக்கொடுத்தார் என்றால் சரியல்ல. அதில் இழப்பு ஏற்பட்டதால் அதை மூடிவிட்டேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக செந்தில் ஸ்டுடியோ வீட்டில் வைத்து நடத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது என்றால் போட்டோ எடுக்கபோனால் வருமானம் கிடைக்கும். போட்டோ எடுத்த சம்பாதித்தற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பாலசுப்ரமணியன்

S.Sen

என்பவர் வாங்கிய கடனுக்கு நான் பிணையாளராக இருந்து கடனை அடைக்கவில்லை என்று எனக்கு வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவில் இருந்து ஒரு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் அது **பிவாசா 1** ஆகும். நான் என் சித்தப்பா ராஜேந்திரனுக்கு டிராக்டர் வாங்க பெற்ற கடனுக்கு ஜாமின்தாரராக இருந்ததற்காக வந்த அறிவிப்பு தான் என்னிடம் காட்டப்படும் **அறிவிப்பு அது பிவாசா 2** ஆகும். என் அப்பா எனக்கு பல்சர் இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தான் வாங்கினேன் என்கிறார். அந்த கடனையும் 1ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சரியல்ல. நான் பல்சர் வண்டி வாங்கிய கடனை செலுத்தியதற்கான ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு எந்தவிதமான வருமானமும் கிடையாது எந்தவிதமான தொழிலும் நிரந்தரமாக செய்யவில்லை என்றாலும் அது சரியல்ல. இதுநாள் வரை எனக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. சிதம்பர முதலியார் என் தாத்தா. அவருக்கு சொத்துக்கள் இருந்தது. அவர் 1980ல் இறந்து விட்டார். என் முப்பாட்டனார் பொன்னம்பல முதலியார் ஆவார். அவருக்கு என் தாத்தா ஒரே மகன் என்றால் சரியல்ல. அவருக்கு ஐந்து மகன்கள். பொன்னம்பல முதலியாரின் ஒரே மகன் தான் சிதம்பர முதலியார் என்றால் சரியல்ல. அவருக்கு ஐந்து மகன்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா உயிருடன் இருக்கும்போதே குடும்ப சொத்துக்களை பாகப்பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பாகப்பாத்திய கரவோலை பத்திரம் எங்கள் குடும்பத்தில் 14.07.1977 அன்று ஏற்பட்டது என்றால் சரிதான். அது **பிவாசாஆ 3** ஆகும். அதில் சொத்துக்கள் A முதல் F வரை பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் B ஷெட்யூல் சொத்து என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 14.07.1975 கரவோலைப்படி சிதம்பர முதலியார் மற்றும் அவரிடம் பிள்ளைகள் கணிபதி, சீனிவாசந், தட்சிணாமூர்த்தி, சோமசுந்தரம் ஆகியோர் பாகம் பிரித்து கொண்டார்கள் அதன்படி என் தாத்தா சிதம்பர முதலியாரின் வாரிசு என்ற முறையில் என் அப்பாவிற்கு

S. Sur

கொடுக்கப்பட்டுவிட்டதால் அது அவரின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல என் தாத்தாவின் சொத்து அவருடைய மகன்கள் பிரித்து கொண்டார். சிதம்பர முதலியார் தன் சொத்துக்களை அவரின் மகன்கள் பாகம் பிரித்துக்கொண்டதால் அதில் என் அப்பாவிற்கு கிடைத்த பாகம் அவரின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

S.Selv

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

23/9/15

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை